உ

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

சைவ சமயக் கருத்துணர்வினூடாக சமூகசேவை

## SAIVA MUNNETTA SANGAM(UK)

2 Salisbury Road Manor park, London E 12 6AB.

TEL: 0208 514 4732 FAX: 01268 561805


---

# அன்னைக்கு எமது அஞ்சலிகள்.

**திருமதி. செல்வநாயகி இரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடைய நாம் பிராத்திக்கின்றோம். அவர்களது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள்.**

**தோற்றம்**

**12.09.1920**



**மறைவு**

**09.05.2001**

பொருளுடையோரைச் செயலினும் வீரரைப் போர்களத்தும்
தெருளுடையோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவது போல்
அருளுடையோரைத் தவத்தில் குணத்தில் அருளில் அன்பில்
இருளறு சொல்லிலுங் காணத்தகும் கச்சி ஏகம்பனே.

- பட்டினத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

# மாணிக்கவாசக சுவாமிகள்
# அருளிச் செய்த திருவாசகம்
## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் றாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங்கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க
கரங்குவிவா ருண்மகிழும்
கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ்
சீரோன்கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசனடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடிபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தைமகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் றன்கருணைக்
கண்காட்ட வந்தெய்தி
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மளிர்கின்ற மெய்ச்சுடரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான்
வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற்கடையாக் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராதுநின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதேயளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ் ஞானத்தால்
கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்குமவ வருவும்புணர்வும்இல்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச்
சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின்
வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயெனன் சிந்தனையுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து
பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாரமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்ற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருப்பெருந்துறையில் அருளிய திருவாசகம்.
## அடைக்கலப் பத்து
## பக்குவ நிர்ணயம்

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின்
சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியாருடன்
போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன்
உடையாய்உன்அடைக்கலமே. 1

வெறுப்பனவே செய்யும்என்
சிறுமையைநின் பெருமையினால்
பொறுப்பவனே அராப்பூண்
பவனேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின்
திருலரு ளால் என் பிறவியைவேர்
அறுப்பவனே உடையாய்
அடியேன் உன்அடைக்கலமே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பெருமான் என்பிறவியை
வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெரு
மான்என் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோன்நெடு
மாலறியாமல் நின்ற
அரும்பெருமான் உடையாய்
அடியேன்உன் அடைக்கலமே. 3

பொழிகின்ற துன்பப் புயல்வெள்
ளத்தில்நின் சுழற்புணைகொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர்
வான்யான் இடர்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவெறிய
அழிகின்றனன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 4

சுருள்புரி கூழையர் சூழலிற்
பட்டுன் திறம்மறந்திங்கு
இருள்புரி யாக்கையி லேகிடந்
தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன்
பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரியாய் உடையாய்
அடியேன்உன் அடைக்கலமே. 5

மாழைமைப் பாவிய கண்ணியர்
வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல்
தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போவந் தெந்நாள்
வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாய்
அடியேன் உன் அடைக்கலமே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்கணினார் நுடங்கும் இடையார்
வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப்
புரளாமற் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித்
தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய்
அடியேன்உன் அடைக்கலமே. 7

மாவடு வகிரன்ன கண்ணி
பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கூடம்பிக்கே
யிடவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல்
போற்கரந்து பரந்துள்ளம்
ஆகெடுவேன் உடையாய்
அடியேன்உன் அடைக்கலமே. 8

பிறிவறியா அனபர்நின்
அருட்பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம்வந்து பெற்றார்
உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன்
நின்னையே அறியும்
அறிவறியேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 9

வழங்குகின் றாய்க்குன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்
வினையேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந்த துய்யக்கொள்ளாய்
அழுங்கு கின்றேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையில் அருளிய திருவாசகம்.
## யாத்திரைப் பத்து
## அனுபவாதீதம் உணர்தல்

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாதுள்ளம் கலந்தணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆ ஆ என்னப் பட்டன்பாய்
ஆட்பட்டீர் வந் தொருப்படுமின்
போவோங் காலம் வந்ததுகாண்
பெய்விட்டுடையான் கழல்புகவே. 1.

புகவே வேண்டா புலன்களில்நீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே. 2

தாமே தமக்குச் சுற்றமுந்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே. 3

அடியார் ஆனீர் எல்லீரும்
அகல வீடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோகத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
பூவார் கழற்கே புகவிடுமே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே. 6

நிற்பார் நிற்கநில் லாவுலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே. 7

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமாலுற்றுப் பின்னைநீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த பேதே சிவபுரத்துத்
திருமாலறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பெய்யிற் கிடந்து புரளாதே. 9

புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின்
சிவலோ ககோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே. 10

திருச்சிற்றம்பலம்

## அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ்.

திருச்சிற்றம்பலம்

அவனிதனிலே பிறந்து மதலையெனவே தவழ்ந்து
அழகுபெறவே நடந்து இளைஞோனாய்
அருமழலையே மிகுந்து குதலை மொழியே புகன்று
அதிவிதமதாய் வளர்ந்து பதினாறாய்
சிவகலைகளாகமங்கள் மிகவுமறையோது மன்பர்
திருவடிகளே நினைந்து துதியாமல்
தெரிவையர்களாசை மிஞ்சி வெகு கவலையாயுழன்று
திரியுமடியேனை யுன்ற னடிசேராய்
மவுனவுபதேசசம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீதணிந்த மகதேவர்
மனமகிழ் வேய ணைந்து ஒருபுறமதாக வந்த
மலை மகள் குமாரதுங்க வடிவேலா
பவனிவரவே யுகந்து மயிலின்மிசையே திகழ்ந்து
படியதிரவே நடந்த கழல்வீரா
பரமபதமாய செந்தில் முருக னெனவேயுகந்து
பழநி மலை மேலமர்ந்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடா் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயா்வானாா்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே
விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணா்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவா் முனிவா் பரவிய புலியூ
ரினில்நட மருவு பெருமாளே.

எழுபிறவி நீா்நிலத்தி லிருவினைகள் வோ்பிடித்து
இடா்முளைக ளேமுளைத்து வளா்மாயை
எனுமுலவை யேபணைத்து விரகுகுழை யேகுழைத்து
இருளிலைக ளே தழைத்து மிகநீளும்
இழவுநனை யேபிடித்து மரணபழ மேபழுத்து
இடியுமுடல் மாமரத்தி னருநீழல்
இசையில்விழ ஆதபத்தி யழியுமுன மேயெனக்கு
இனியதொரு போதகத்தை யருள்வாயே
வழுவுநெறி பேசுதக்க னிசையுமக சாலையுற்ற
மதியிரவி தேவா்வஜ்ர படையாளி
மலா்கமல யோனிசக்ர வளைமருவு பாணிவிக்ர
மறையளதிா் வீரவுக்ரா் புதல்வோனே
அழகியக லாபகற்றை விகடமயிலேறி யெட்டு
அசலமிசை வாகையிட்டு வரும்வேலா
அடலசுரா் சேனைகெட்டு முறியமிக மோதிவெட்டி
அமரா்சிறை மீளவிட்ட பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருபற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## சேக்கிழாரடிகள் அருளிய பெரிய புராணம்.

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
தேன டைந்த மலர்ப் பொழிற் றில்லையுண்
மாந டஞ்செய் வரதர்பொற் றாடொழ.

அங்கண னம்மையே யென்றருள் செயவப்பா வென்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்து வீழ்ந்தெழுந்தார் தம்மைச்
சங்க வெண்குழையி னருந் தாமெதிர் நோக்கி நம்பா
இங்கு வேண்டுவதே னென்ன விறைஞ்சி நின்றியம்புகின்றார்.

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும் போது உன்னடியின் கீழிருக்க வென்றார்.

கூடுமா றருள் கொடுத்துக் குலவு தென்றிசையி லென்று
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய வாலங் காட்டி
ஆடுமா நடமு நீகண்டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை யென்றான் பரவுவார் பற்றாய் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பரி சருளப் பெற்ற வம்மையுஞ் செம்மை வேத
மெய்ப் பொருளானார் தம்மை விடைகொண்டு வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை யன்பாற் றிகழ் திருவாலங்காடா
நற்பதி தலையினாலே நடந்துபுக் கடைந்தாரன்றே.

மங்கையர்க்குத் தனியரசி யெங்கடெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடா டென்னர்
குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோனருளி னாலே யிருந்
தமிழ் நாடுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண்டிருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்றலாமே

பூசுரர் சூழாமணியாம் புகலி வேந்தர் போனக
ஞானம் பொழிந்த புனித வாக்காற்
தேசுடைய பாடல்பெறுந் தவத்தினாரைச்
செப்புவதியா மென்னறிந்து தென்னர் கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் றனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்கால மன்னிப் பின்னை
ஆசிநெறி யவரோடுங் கூட வீசரடி நிழற்
கீழமர்ந்திருக்க வருளும் பெற்றார்.

ஒழியாப் பெருமைச் சடையனா ருரிமைச் செல்வத் திருமனையா
அழியாப் புரங்க ளெய்தழித்தா ராண்ட நம்பி தனைப்பயந்தா
இழியாக் குலத்தி னிசைஞானிப் பிராட்டி யாரை யென்சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ முடியாதெவர்க்கு முடியாதால்.

என்று மின்பம் பெருகு மியல்பினோ
டொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் அருளிய உடற்கூற்று வண்ணம்

ஒரு மடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம்தரும் அன்பு பொருந்தி
உணர்வுகலங்கி ஒழகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து
பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில் வந்துபு குந்துதிரண்டு
பதுமம் அரும்பு கமடம் இதென்று
பார்வைமெய்வாய் செவி கால்கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து
மகளிர்கள்சேனை தரஅணைஆடை
மண்பட கொங்கை அமுதம் அருந்தி
ஓர் அறிவு ஆகிவளர்ந்துஒளிநகைஊறல்
இதழ்மடவாரும் உவந்து முகந்திட
வந்துதவழ்ந்து மடியில்இருந்து
மழலைபொழிந்து
வாஇருபோஎன நாமம் விளம்ப
உடைமணிஆடை அரைவடம்ஆட
வா இரு பேஎன நாமம்விளம்ப
உடைமணிஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களோடு உண்டு
தெருவில் இருந்து புழுதிஅளைந்து
தேடிய பாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே
உயர்தருஞான குருஉபதேச
முத்தமிழின் கலையும் கரைகண்டு
வளர்பிறைஎன்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து
மயிர்முடிகோதி அறுபதநீல
வண்டிமிர் தண்தொடை
கொண்டடி புனைந்து
மணிபொன் இலங்குபணிகள் அணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகர் போதகர் கூடிவணங்க
மதனசொரூபன் இவன்எனமோக
மங்கையர்கண்டு மருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
மாமயில்போல் அவர்போவது கண்டு
மனதுபொறாமல் அவர்பிறது ஓடி
மங்கல செங்கலசம்திகழ் கொங்கை
மருவமயங்கி இதழ் அமுதுண்டு
தேடியமாமுதல்சேரவழங்கி
ஒருமுதல் ஆகி முதுபொருளாய்
இருந்ததனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம்இதுஎன்று
வாலிபகோலமும் வேறு பிரிந்து
வளமையும்மாறி இளமையுமாறி
வன்பல்விழுந்த இரு கண்கள் இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதம்அடைந்து
செங்கையினில் ஓர்தடியும் ஆகியே
வருவதுபோவது ஒருமுதுகூனு
மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாய் அறியாமல் விடாமல்மொழிந்து
துயில்வருநேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்துவறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
தோகையர்பாலகர் கோரணிகொண்டு
கலியுகம் மீதில் இவர்மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலஎன்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து
தெளிவும் இராமல் உரைதடுமாறி
சிந்தையும் நெஞ்சும் உலைந்துமருண்டு
திடமும்அழிந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதரவு ஏதுஎனநொந்து
மறையவன் வேதன் எழுதியவாறு
வந்தது கண்டம் என்று தெளிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியெனகண்டம் இனியென தொந்தம்
மேதின்வாழவுநிலாதினி நின்ற
கடன்முறைபேசும் எனஉரைநாவு
தங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே
வளர்பிறைபோல எயிறும் உரோம
மும்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து
வலைகொண்டுவீசி உயிர்கொண்டுபோக
மைந்தரும் வந்து குனிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேஇவர் காலம்அறிந்து
பழையவர்காணும் எனும் அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம் வேகவிசாரியும் என்று
பலரையும்ஏவி முதியவர்தாம்
இருந்த சவம்கழு வுஞ்சிலர்என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும்உடம்பை
வரிசைகெடாமல் எடும்எனஓடி
வந்து இளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலைஅடைந்து
மானிடவாழ்வென நொந்து
விறகுஇடைமூடி அழல்பொடுபோட
வெந்துவிழுந்தமு நிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகிஅடங்கி
ஓர்பிடிநீறுமி லாதஉடம்பை
நம்பும் அடியேனை இனிஆளுமே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைவா! மரணத்தையிட்டு உன்னுடன் வாதிட
மாட்டேன்.
மாறாக இவ் அன்னையை எமக்கு
அறிமுகப்படுத்தி நீ செய்வித்த அறப்
பணிகளுக்கு நான் நன்றி சொல்கின்றேன்.
ஆனால், உன்னை ஒன்று கேட்பேன்,
நீ நிறைவேற்ற வேண்டும் ஐயா.
எம்மைப் பராமரித்துக் களைத்து வரும் இவ்
அன்னையின் உயிரை நீ பராமரித்துக்
களைப்பகற்ற வேண்டும்.
நீண்ட ஓய்வின் பின் மீண்டும் இவ்வுயிரை நீ
பிறப்பிக்க நினைத்தால் ஆன்மீகத்தின் மூலமாக
எமது சமுதாயம் உய்ய வழி சொல்லும் சுடர்
மிகு வழி காட்டியாகத் திருப்பி அனுப்பி
எமக்கருள் செய் இறைவா.
அது வரை நாம் பொறுத்திருப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org